TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8093809

1. District : மாவட்டம் Karur | PS: காவல்நிலையம் VTAC | Year: ஆண்டு 2020 | FIR No.: மு.த.அ. எண் 02/2020 | Date: நாள் 18.3.2020

2. (i) Act சட்டம்: P.C Act 1988 as — Sections பிரிவுகள்: 7(a)
   (ii) Act சட்டம்: amended 2018 — Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்: — Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் — Date from : நாள் முதல் — Date to : நாள் வரை 10.3.2020/ 17.3.2020.
   Time Period : நேர அளவு — Time from : நேரம் முதல் — Time to : நேரம் வரை
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 18.3.2020 — Time : நேரம் 08.00 hrs
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 18.3.2020 — Time : நேரம் 09.20 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக — computer typed.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் 15 km, West
   Beat Number : முறைக் காவல் எண்
   (b) Address : முகவரி வட்டார வளர்ச்சி அலுவலகம், க. பரமத்தி, கரூர் மாவட்டம் ஊராட்சி ஒன்றியம்.
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் — District : மாவட்டம் —

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையிட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் R. ரமேஷ்
   (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் ராமசாமி
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 37
   (d) Nationality : நாட்டினம் இந்தியன்
   (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் —
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் —
   Place of Issue : வழங்கப்பட்ட இடம் —
   (f) Occupation : தொழில்
   (g) Address : முகவரி 36, காநங்கோட்டை, கன்னிவாடி அஞ்சல், தாராபுரம் தாலுகா திருப்பூர் மாவட்டம்

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   ஜெயந்தி ராணி, வட்டார வளர்ச்சி அலுவலர், க. பரமத்தி ஊராட்சி ஒன்றியம், கரூர் மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையிட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
   —

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்தனுப்படுகிறது.

கரூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் ஆகிய நான் இன்று 18.03.2020 ஆம் தேதி 08.00 மணிக்கு நிலையத்தில் இருந்த போது திருப்பூர் மாவட்டம், தாராபுரம் தாலுகா, கன்னிவாடி அஞ்சல், காதக்கோட்டை, எண்.36, ராமசாமி என்பவர் மகன் ரமேஷ் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த, எழுத்து மூலமான புகாரை பெற்று கீழ்கண்டவாறு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். புகாரின் விபரம் பின்வருமாறு, அனுப்புநர்:- ரா.ரமேஷ், த/பெ.ராமசாமி, எண்.36, காதக்கோட்டை, கன்னிவாடி அஞ்சல், தாராபுரம் தாலுகா, திருப்பூர் மாவட்டம். பெறுநர்:- காவல் ஆய்வாளர், லஞ்ச ஒழிப்புத்துறை, கரூர். அய்யா, நான் மேலே கண்ட முகவரியில் எனது குடும்பத்துடன் வசித்து வருகிறேன். நான் MCA வரை படித்துள்ளேன். நான் ரியல் எஸ்டேட் தொழில் செய்து வருகிறேன். கடந்த 2011 ஆம் ஆண்டு கரூர் மாவட்டம், புகளூர் வட்டம், பவித்திரம் கிராமத்தில் பட்டா எண்கள் 3861, 3860, 3487, 3044, 3043, 3042, 3041 அ.பு.ச.11, 5.15 ல் ஏக்கர் இதில் சப்டிவிசன் படி சர்வே 11/A1, 11/A2, 11/A3, 11/B1, 11/B2, 11/C2, 11/C3, 11/C4 ஆகிய எண்களில் கட்டுப்பட்ட ஏக்கர் 4.58 நிலத்தை கிரையமாக வாங்கினேன். அதை

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

[signature] 18.3.2020
Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு [signature] 18/03/2020

15. Date & Time of despatch to the court
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
18.3.2020 / 10.10 hrs

Name: பெயர் M. REKHA,
Rank: நிலை ......................No. எண் ..........
INSPECTOR OF POLICE
V&AC, Karur.

**Continuation of Karur Vigilance and Anti-Corruption FIR in Cr.No. 02/2020.**

96 மனைகளாக பிரித்ததில், 79 மனைகளை மனைகள் வரன்முறைப்படுத்துதல் திட்டம் - 2017 அமல்படுத்துவதற்கு முன்பே விற்பனை செய்துவிட்டேன். மீதி 17 மனைகள் விற்பனை ஆகாமல் இருந்தது. தற்போது அந்த மனைகளை விற்பனை செய்யலாம் என்று இருந்தேன். மனைகள் வரன்முறைபடுத்துதல் திட்டம் 2017ன்படி DTCP அப்ருவல் பெறவேண்டியிருந்தது. இதற்காக கடந்த 19.09.2018 ஆம் தேதி இணையதளம் மூலம் விண்ணப்பம் செய்து, பரிசீலனை கட்டணமாக ஒரு மனைக்கு ரூ.500 வீதம் 17 மனைகளுக்கு ரூ.8,500/- செலுத்தினேன். அதற்கு பின்பு நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், திருச்சிராப்பள்ளி மண்டலம், திருச்சிராப்பள்ளி அவர்கள் அலுவலகத்திலிருந்து ந.க.எண்.4390/2018, தி.ம.2, நாள் 10.11.2018ன்படி குறிப்பிட்ட நிபந்தனைகளுடன் கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கப்பட்டு, வட்டார வளர்ச்சி அலுவலர், க.பரமத்தி ஊராட்சி ஒன்றியம், கரூர் மாவட்டம் அவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது. எனக்கும் ஒரு நகல் கிடைக்கப்பெற்றது. மேற்படி விற்பனையாகாத 17 மனைகளை யாரும் விலைக்கு கேட்காததால், நான் வட்டார வளர்ச்சி அலுவலரை சந்திக்கவில்லை. தற்பொழுது மேற்படி மனைகளை வாங்க சிலர் விருப்பம் தெரிவித்ததால், க.பரமத்தி ஒன்றிய அலுவலகம் சென்று திரு.முருகேசன் என்பவரிடம் விபரம் கேட்க, அவர் ஊராட்சி மன்ற தலைவரிடம் சான்று பெற்று, மனைகள் வரன்முறைபடுத்துதல் திட்டம் 2017ன்கீழ் விற்பனையாகாத 17 மனைகளின் பரப்பளவு 20581 சதுர அடிக்கு 10% அரசுக்கு நன்கொடையாக தரவேண்டும் என்றும், வரன்முறைபடுத்தும் கட்டணம் ரூ.70,844/- சலான் மூலம் அரசுக்கு செலுத்த வேண்டும் என்றும், வளர்ச்சி கட்டணம் ரூ.39,350/- உள்ளாட்சி வங்கி கணக்கிற்கு, வரைவு காசோலை மூலம் செலுத்த வேண்டும் என்றும் கூறினார். அதன் பேரில் கடந்த 13.02.2020 ஆம் தேதி கரூர் மாவட்ட கருவூலத்தில் ரூ.70,844/- செலுத்தினேன், அன்றைய தினமே வளர்ச்சி கட்டணம் ரூ.39,350/- க்கான வரைவோலையை கரூர் Equitas வங்கியில் எடுத்தேன். பின்பு 14.02.2020 ஆம் தேதி பவித்திரம் ஊராட்சி மன்ற தலைவர் அவர்களிடம் ஒப்படைப்பு செய்யும் 10 சதவீத நிலத்தை ஊராட்சியால் ஏற்றுக் கொள்ளப்படும் என்று சான்று பெற்று, கடந்த 19.02.2020 ஆம் தேதி மேலக்கரூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் நன்கொடை ஆவணம் எண். 1354/2020 ஆக பதிவு செய்தேன். பின்பு நன்கொடை ஆவணம், வரைவு காசோலை, அரசு கருவூலத்தில் செலுத்திய ரசீது ஆகியவற்றை 19.02.2020 ஆம் தேதி அன்றே திரு.முருகேசன் அவர்களிடம் கொடுத்தேன். அப்போது அவர் மனைகளுக்கு அப்ருவல் வழங்குவது சம்மந்தமாக வட்டார வளர்ச்சி அலுவலர் திருமதி ஜெயந்திராணி அவர்களை சந்திக்க வேண்டும் என்றும், அலுவகத்தில் வேலையாக இருப்பதால் 10 நாட்கள் கழித்து வரவேண்டும் என்றும் கூறினார். அதன்பிறகு 10.03.2020 ஆம் தேதி மதியம் சுமார் 2 மணிக்கு நான் க.பரமத்தி வட்டார வளர்ச்சி அலுவலர் திருமதி ஜெயந்திராணி அவர்களை அவருடைய அலுவலகத்தில் சந்தித்து, மேற்படி என்னுடைய மனைகள் அப்ருவல் சம்மந்தமாக கேட்ட போது, ஒரு மனைக்கு ரூ.2000 வீதம் 17 மனைகளுக்கு ரூ.34,000/- எனக்கு தனியாக கொடுக்க வேண்டும் என்று கூறினார். நான் ஏற்கனவே அரசுக்கு செலுத்த வேண்டிய கட்டணத்தை செலுத்திவிட்டேனே மீண்டும் ரூ.34000/- செலுத்த வேண்டுமா என்று BDOவிடம் கேட்டேன். அதற்கு அவர் விபரம் புரியாத ஆளாக இருக்கிறீர்கள்,

உங்களுடைய மனைகளுக்கு அப்ருவல் வழங்குவதற்கு என்னை நீங்கள் தனியாக கவனிக்க வேண்டும் என்று கூறினார். நான் அவ்வளவு பணம் என்னால் புரட்ட முடியாது என்றும், கொஞ்சம் குறைத்துக் கொள்ளுங்கள் என்றும் கேட்டேன். அப்போது அவர் உங்களுக்காக ரூ.4000/- குறைத்துக் கொள்கிறேன் என்றும், ரூ.30,000/- கொடுத்தால்தான் அப்ருவல் வழங்குவேன் என்றும் கறாராக கூறிவிட்டார். நான் பல இடங்களில் கேட்டுப்பார்த்தும் என்னால் பணம் புரட்ட முடியவில்லை. அதன் பின்பு 17.03.2020 ஆம் தேதி 15.30 மணிக்கு மீண்டும் க.பரமத்தி வட்டார வளர்ச்சி அலுவலகம் சென்று BDO திருமதி. ஜெயந்திராணி அவர்களை சந்தித்து என்னுடைய மனைகளுக்கு அப்ருவல் வழங்குவது சம்மந்தமாக கேட்டேன். அப்போது அவர் நான் கேட்ட பணம் கொண்டு வந்திருக்கிறீர்களா என்று கேட்டார். நான் பணம் புரட்ட மிகவும் சிரமமாக உள்ளது. என் வேலையை கொஞ்சம் முடித்துக் கொடுங்கள் மேடம் என்றேன். அதற்கு அவர் ரூ.30,000/- எனக்கு கொடுத்தால் மட்டுமே அப்ருவல் வழங்க முடியும் என்று கறாராக கூறிவிட்டார். நான் வீட்டிற்கு வந்து யோசனை செய்து பார்த்ததில், அப்ருவல் வழங்குவதற்காக லஞ்சம் கொடுக்க விருப்பம் இல்லை. எனவே என்னிடம் ரூ.30,000/- லஞ்சம் கேட்ட க.பரமத்தி ஒன்றிய வட்டார வளர்ச்சி அலுவலர் திருமதி. ஜெயந்திராணி அவர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். வட்டார வளர்ச்சி அலுவலர் கேட்ட ரூ.30,000/- கொண்டு வந்துள்ளேன். மேலும் வட்டார வளர்ச்சி அலுவலகத்தில் சமர்ப்பிக்கப்பட்ட நன்கொடை ஆவணத்தின் நகல் இதனுடன் இணைத்துள்ளேன். இப்படிக்கு Sd/- Remesh 18.03.2020. Sir, submitted, Received the complaint on 18.03.2020 at 08.00 hrs. A confidential verification has been conducted in respect of the complaint through sources. Complaint was found to be genuine and reputation of the accused was found to be bad. Hence, after getting oral permission from the Superintendent of Police, Southern Range, DVAC, Chennai. I am registering a case in Karur V&AC Cr.No.02/2020, u/s. 7(a) of PC Act 1988 as amended by the PC (Amendment) Act 2018 on 18.03.2020 at 09.20 hrs and took up investigation Sd/- M.Rekha, 18.03.2020, (M.Rekha) Inspector of Police, V&AC, Karur. இதன் அசல் முதல் தகவல் அறிக்கை மற்றும் திரு. ரமேஷ் அவர்களின் அசல் புகார் மனு ஆகியவற்றை இணைத்து மேன்மைமிகு தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் மற்றும் சிறப்பு நீதிமன்ற நடுவர், கரூர் அவர்களுக்கு அனுப்பி வைத்தேன். இதர நகல்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்தேன்.

Rekha 18.3.2020

(M.ரேகா)
காவல் ஆய்வாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு
கரூர்
18.03.2020.